# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## **<u>ஆணை நாள். 12.08.2026</u>**

## **<u>முன்னிலை</u>**

## **திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
## **மாநில தகவல் ஆணையர்**

*****

## **<u>வழக்கு எண். CP 778/F/2023</u>**

திரு.மோ.வினோத் குமார், -- புகார்தாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (சேலம்)
லிமிட், 12, இராமகிருஷ்ணா சாலை, -- பொது அதிகார அமைப்பு
சேலம்-636 007.

******

## **<u>இறுதிஆணை</u>**

இவ்வாணையம் 09.06.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.S.செல்வகுமார், உதவி மேலாளர் (சட்டம்-கூட்டாண்மை), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம்-7 மற்றும் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.K.பழனிவேல்,(ஓய்வு), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம்-7 ஆகியோர்கள் 14.07.2026 அன்று அறிக்கை சமர்ப்பிப்பதற்கு பதிலாக 13.07.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் தனது எழுத்து மூல விளக்கத்தில் தனியரின் 6(1) மனுவில் கோரியிருந்த இனம் 1 முதல் 5 வரையிலான தகவல்கள் தருமபுரி மண்டலத்தைச் சார்ந்தது என்பதனால் தங்கள் அலுவலகத்தில் பெறப்பட்ட மனு சட்டப்பிரிவு 5(4)-ன் படி 27.01.2023-ல் தகவல் கோரி தருமபுரி மண்டலம், தருமபுரி நகர் கிளை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு 14.03.2023-ல் தகவல்கள் பெறப்பட்டதாகவும், தனியர்

கோரிய தகவல்கள் 01.01.2011 முதல் 31.05.2022 வரையிலான சுமார் 12 ஆண்டுக்களுக்கான தகவல்களை கோரியிருந்ததாகவும், கோரியுள்ள தகவல்கள் அதிகப்படியான (Volume of Information) தகவல் என்ற விவரம் மனுதாரருக்கு 17.03.2023 தேதியிட்ட கடிதம் மூலமாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய தகவல்கள் காலதாமதமாயினும் முழுமையாக தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்து தனது எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து கீழ்க்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

- **இன்றைய விசாரணையில் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் சமர்ப்பித்த எழுத்துமூல விளக்கம் ஏற்புடையதல்ல என்பதை ஆணையம் பதிவு செய்து, தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(8)(b)-ன் கீழ் ரூ.2,000/-(ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) இழப்பீடாக மனுதாரருக்கு வழங்குமாறு பொது அதிகார அமைப்பிற்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. இழப்பீட்டு தொகையினை மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ரசீதை பொதுத் தகவல் அலுவலர் 18.08.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

மேற்குறிப்பிடப்பட்ட ஆணையத்தின் முன் உத்தரவிற்கிணங்க, பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.S.செல்வகுமார், உதவி மேலாளர் (சட்டம்-கூட்டாண்மை), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம்-7 அவர்கள் 18.08.2026 அன்று ஆஜராகி அறிக்கை சமர்ப்பிப்பதற்கு பதிலாக 12.08.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, இழப்பீட்டு தொகையான ரூ.2,000/-(ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)-யினை மனுதாரருக்கு வழங்கியதற்கான செலுத்துகை சீட்டின் ரசீதினையும் இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்ததை ஆணையம் பதிவு செய்து ஏற்று, இந்த புகார் மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். CP 778/F/2023**

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர் /
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (சேலம்) லிமிட்,
12, இராமகிருஷ்ணா சாலை,
சேலம்-636 007.

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் (18.01.2023 தேதிய)**
**திரு.க.பழனிவேல்,**
**உதவி மேலாளர் (துணிக்கை-கூட்டாண்மை),**
**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,**
**12, இராமகிருஷ்ணா சாலை,**
**சேலம்-636 007.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**புகார்தாரர்**

திரு.மோ.வினோத்குமார்,
த/பெ.மோரனஅள்ளி,
4/184, மேல்சோமார்பேட்டை,
வெங்கடாபுரம் அஞ்சல்,
கிருஷ்ணகிரி வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்-635 001.

**நகல்**

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (சேலம்)லிமிடெட்,
12, இராமகிருஷ்ணா சாலை,
சேலம் மாவட்டம்-636 007.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
**சென்னை**-35.(For Followup).
Copy to: File NS/PA-